

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில் மனு அளித்த பயனாளிகளுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் உடனுக்குடன் பட்டா வழங்கினார். உடன் முன்னாள் நகர் மன்றத் தலைவர் சிவப்பிரகாசம், முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், நகரத் தி.மு.க. செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி, முன்னாள் எம்.எல்.ஏ. கே.எம்.விஜயகுமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபுஜி ஆகியோர் இருந்தனர்.



கழகத் தலைவர் , முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஒப்புதலோடு திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி நகர, ஒன்றிய, பேரூர், அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கு நேர்காணல் திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் மற்றும் மாநில பொறியாளர் துணை செயலாளர் சி. பிரதீப் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.சந்தீப்ராஜ் மற்றும் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே பிரபாகரன் மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் ச.வேலு , டி.மதன், எஸ்.சிரஞ்சீவி எஸ்.விக்னேஷ் வீ.தனபாண்டியன் மற்றும் நேர்காணல் வந்த பொறியாளர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வாழ்வில், பொருளாதாரத்தில் வெற்றி பெறுவதற்கு

# முதலமைச்சரின் 'நான் முதல்வன்' திட்டம் உறுதுணையாக இருக்கும்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேச்சு!

செஞ்சி, ஆக. 11 -

வாழ்வில், பொருளாதாரத்தில் வெற்றி பெறுவதற்கு முதலமைச்சரின் நான் முதல்வன் திட்டம் உறுதுணையாக இருக்கும் என ஆலம்பூண்டியில் நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமில் வேலை வாய்ப்புக்கான பணி ஆணையை வழங்கி முன்னாள் அமைச் சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசினார்.

விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மாபெரும் வேலை வாய்ப்புமற்றும் இளைஞர் திறன் திருவிழா செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ஸ்ரீ ரங்க பூபதி பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட மகளிர் திட்ட இயக்குனர் செந்தில் வடிவு தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் மாவட்ட மகளிர் உதவி திட்ட அலுவலர் கமலாவள்ளி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு வேலைவாய்ப்பு முகாமை தொடங்கி வைத்து வேலை வாய்ப்புக்கான பணி ஆணையும், பல்வேறு நிறுவனங்கள் மூலம் தொழில் புரிவதற்கான பயிற்சி வழங்குவதற்கான சான்றிதழ்களை வழங்கிசிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

நான்கு ஆண்டு காலத்தில் தமிழகத்தில் வேலை வாய்ப்பு மூலம் அரசு சார்பிலும் தனியார் துறை சார்பிலும் லட்சக்கணக்கான நபர்கள் நேரடியாக வேலைவாய்ப்புக்கு சென்றுள்ளனர்.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் கிராமத்தில் உள்ள ஏழை எளிய விவசாய குடும்பத்தைச் சார்ந்த மகன், மகள்கள், கூலி தொழிலாளர்களின் மகன் மகள்கள் இன்றைக்கு அரசு மற்றும் அரசு துறையுடன் இணைந்து தனியார் துறையில் வேலை வாய்ப்புகளை பெறுகின்ற நிலையை பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் முதலமைச்சரின் தொடர் முயற்சியாகும். இத்திட்டத்தின் மூலம்50க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். நான் முதல்வன் திட்டத்தில் தங்களது பிள்ளைகள் எல்லா நிலையிலும் முதலிடம் பெறுவதற்கு பெற்றோர்கள் வழிவகை செய்ய வேண்டும்.

நான்காண்டு காலத்தில் பொருளாதார வளர்ச்சி 11.6சதவீதம் உயர்ந்துள்ளது.இலவச பேருந்துகள் மூலம் பொருளாதாரம் சேமிக்கப்படுகிறது, புதுமைப் பெண், தமிழ் புதல்வன் , கலைஞர் மகளிர் உரிமைத்தொகை போன்ற திட்டங்களால் ஒவ்வொரு குடும்பத்திலும் பொருளாதாரம் உயர்ந்து வருகிறது . அரசனுடைய வருவாயை மக்களிடம் சரிசமமாக உள்ளதால் தமிழ்நாட்டின் பொருளாதார நிலை 11.6 சதவீதம் உயர்ந்துள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.தமிழ்நாட்டில் முதன் முதலில் டைடல் பார்க் கொண்டு வந்தவர் கலைஞர். டைட்டில் பார்க் கொண்டு வந்ததால் இன்று பல்வேறு இளைஞர்கள் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம்பல நிறுவனங்களில் பணியாற்றும் வாய்ப்பை பெற்றுள்ளனர். இதனால் தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து மாவட்டங்களிலும் டைட்டில் பார்க்அமைப்பதற்கு உத்தரவிட்டதையடுத்து அப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் வாழ்வில் வெற்றி பெறுவதற்கும், பொருளாதாரத்தில் வெற்றி பெறுவதற்குநான் முதல்வன் திட்டம் உறுதுணையாக இருக்கும் என தெரிவித்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தமிழ்நாட்டை எல்லாத் துறைகளையும் சீர்தூக்கி பார்த்து முதலிடம் பெற வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் உழைத்துக் கொண்டிருக்கிறார். பல்வேறு காலகட்டங்களில் தமிழகத்தில் உள்ள படித்த இளைஞர்களுக்கு எல்லாம் நிலையிலும் அவர்களுடைய தகுதிகள் ஏற்ப வேலை கிடைக்க முயற்சி மேற்கொண்ட அரசு திராவிட மாடல் அரசு மக்கள் மீதும் மக்கள் நலன் மீதும் அக்கறை கொண்ட முதலமைச்சரை நாம் பெற்றிருப்பதாக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ பெருமைப்பட தெரிவித்தார்.

முகாமில் பல்வேறு நிறுவனங்கள் பங்கேற்றனர் முகாமில் 500 மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,ரங்க பூபதி பொறியியல் கல்லூரி முதல்வர் மணிகண்டன், மகளிர் உதவி திட்ட அலுவலர்கள் வீரசேகரன், மனுநீதி சோழன், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழுஉறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மாவட்டமகளிர் உதவித் திட்ட இயக்குனர் ஜான்சன்அனைவருக்கும் நன்றி கூறினார்.



விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் செஞ்சி ஒன்றியம் ஆலம் பூண்டி ரங்க பூபதி பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மாபெரும் வேலை வாய்ப்பு மற்றும் இளைஞர் திறன் திருவிழாவில் வேலைவாய்ப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணி ஆணைகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் செந்தில் வடிவு, ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், வல்லம் அமுத ரவிக் குமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், ரங்க பூபதி பொறியியல்கல் லூரியின் முதல்வர் மணிகண்டன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் உடன் உள்ளனர்.

### வாக்குப் பதிவின் நம்பகத்தன்மையை

# தேர்தல் ஆணையம் மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டும்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஆக. 11 –

வாக்குப் பதிவின் நம்பகத் தன்மையை தேர்தல் ஆணையம் மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டும் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:

இந்திய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி எழுப்பியுள்ள 'வாக்கு திருட்டு' என்ற குற்ற ச்சாட்டு, தற்போது நாடு முழுவதும் பெரும் புயலை கிளப்பி உள்ளது. கடந்த 2024ம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தல் முதல் பல்வேறு தேர்தல்களில் இந்த வாக்கு திருட்டு நடந்துள்ளது. இந்திய தேர்தல் ஆணையமும், ஒன்றிய பாஜ அரசும் இணைந்து இதை செய்துள்ளது. போலி வாக்காளர்கள், போலி முகவரி, ஒரே முகவரியில் அதிக வாக்காளர்கள், தவறான புகைப்படங்கள், படிவம் 6ஐ தவறாக பயன்படுத்துதல் ஆகிய 5 வழிகளில் இந்த வாக்கு திருட்டு நடந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

"எங்களது கட்சிக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளில் தோல்விக்கான காரணம் குறித்து முழுமையாக ஆய்வு செய்தோம். இதில் போலி வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டதை அறிந்துள்ளோம். உதாரணமாக கர்நாடகாவின் மத்திய பெங்களூரு மக்களவை தொகுதியில் இந்த வகையில் 1 லட்சத்து 250 வாக்குகள் திருடப்பட்டுள்ளது. மகாதேவபுரா தொகுதியில் மட்டும் 11,965 போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். போலி மற்றும் தவறான முகவரிகள் மூலம் 40,009 வாக்காளர்கள் போலியாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மத்திய தொகுதியில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களின் முகவரி போலியாக உள்ளது. வீட்டு முகவரியின் கதவு எண் பூஜ்ஜியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது" என்பதையும் தெளிவாக கோடிட்டு காட்டியுள்ளார். வாக்குகளை யார் திருடுகிறார்கள் என்பது மக்களுக்கு தெரியும். முன்பு எங்களிடம் ஆதாரம் இல்லை. இப்போது 100 சதவீதம் ஆதாரம் இருக்கிறது. எனவே வழக்கம்போல் தேர்தல் ஆணையம் சாக்குப் போக்கு சொல்லக்கூடாது. அவர்கள் எங்களுக்கு சிசிடிவி காட்சிகள் மற்றும் மின்னணு வாக்காளர் பட்டியலை வழங்க வேண்டும்.

இது எனது கோரிக்கை மட்டுமல்ல. ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளின் கோரிக்கை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பீகார் சட்டப்பேரவைக்கு விரைவில் தேர்தல் நடக்கிறது. இதற்காக அம்மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் சமீபத்தில் முடிந்தது. கடந்த 1ம் தேதி வரைவு பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. அதில் 65 லட்சம் வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டுள்ளதாக பெரும் சர்ச்சை எழுந்துள்ளது. இந்தச் சூழலில் ராகுல்காந்தி தெரிவித்துள்ள 'வாக்கு திருட்டு' என்பது அரசியல் கட்சிகள் மட்டுமன்றி, மக்கள் மன்றத்திலும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் "ராகுல் காந்தி சொல்வது உண்மையென்றால், தேர்தல் விதி 1960(3) (ஆ) பிரிவின் படி பிரமாணப்பத்திரம் ஒன்றில் கையெழுத்திட்டு புகார் அளிக்க வேண்டும்" என்று தேர்தல் ஆணையம் அவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்தியாவில் 2004ம் ஆண்டு பொதுத்தேர்தலில் முதல் முறையாக மின்னணு வாக்குப்பதிவு முறை அமலுக்கு வந்தது. அதிலிருந்து 20 ஆண்டுகளாக இந்த முறையில் தான் வாக்குப்பதிவு நடந்து வருகிறது. ஒவ்வொரு தேர்தலிலும் மின்னணு வாக்கு இயந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்து எதிர்க்கட்சிகளும், நடுநிலையாளர்களும் பல்வேறு கேள்விகளை முன்வைத்து வருகின்றனர்.

இதற்கு 100 சதவீதம் தெளிவான தீர்வு என்பது இதுவரை கிடைக்காத ஒன்றாகவே உள்ளது. இப்படிப்பட்ட நிலையில் தான் 'வாக்கு திருட்டு' என்ற குற்றச்சாட்டு இப்போது லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் ஹேஷ்டேக்காகி வருகிறது. எனவே வாக்குப்பதிவு குறித்த நம்பகத்தன்மையை மக்கள் பிரதிநிதிகளுக்கு மட்டுமன்றி, மக்கள் மன்றத்திற்கும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும். இதுவே ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் என்கின்றனர் நடுநிலையாளர்கள்.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மயிலை ஆ. சந்திரன்
ஆகஸ்ட் 11 (1996)



இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் பகுதி பிரதிநிதியாகவும் – தென்சென்னை மாவட்டத்தில், வட்டக் கழகச் செயலாளர், மயிலை பகுதிக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



மாலைமணி பி.எஸ்.இளங்கோ
36-வது ஆண்டு நினைவு நாள்
11.8.1989



எங்கள் இதயத்தை விட்டு நீங்காது
என்றென்றும் எங்களது நினைவில் வாழ்ந்து வரும்
இதய தெய்வத்திற்கு அஞ்சலி!

மகன்: சித்தார்த் இளங்கோ
மகள்கள்: திருமதி. தமிழ்ச்செல்வி
திருமதி. மணிமேகலை
திருமதி. எழில் திரு. பழனியப்பா
மனைவி. சகுந்தலா இளங்கோ
மருமகன்கள்: திரு. பாண்டியன்
திரு. சுதாகர்
மருமகள்: தாட்சாயினி சித்தார்த்
பேரன்கள்: வருண்ராஜ், ஷருண்ராஜ், முகில், தர்ஷன், மௌரியன்
மற்றும் அலுவலக நண்பர்கள்